**செய்தி வெளியீட்டு எண்: 555** நாள் – **28.8.2009**

**<u>தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் அருகே</u>**
**<u>சாலை விபத்தில் உயிரிழந்த</u>**
**<u>10 பேரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம்</u>**
**<u>5 இலட்ச ரூபாய் நிவாரண உதவி</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் ஆணை</u>**

**திருச்சி அயன்புத்தூரில் இருந்து மயிலாடுதுறை நோக்கிச் சென்ற தனியாருக்குச் சொந்தமான வேனும், சென்னையில் இருந்து கும்பகோணம் சென்று கொண்டிருந்த அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தும், தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம், கோவிந்தபுரம் கிராமத்தில் நேருக்கு நேர் மோதி இன்று (28.8.2009) ஏற்பட்ட விபத்தில் வேனில் பயணம் செய்த திருச்சி அயன்புத்தூரைச் சேர்ந்த பழனிச்சாமி (வயது 48), சுபத்ரா (வயது 35), கார்த்தி (வயது 17), சுதா (வயது 18), ஐஸ்வர்யா (வயது 17), காஜாமலைக் காலனியைச் சேர்ந்த பன்னீரம்மாள் (வயது 70), வேல்முருகன் (வயது 35), மகேஷ்குமார் (வயது 7), நவீன்குமார் (வயது 5), கிரசண்ட் நகரைச் சேர்ந்த ஜனார்த்தனன் (வயது 58) ஆகிய 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 5 இலட்ச ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து உடனடியாக நிதியுதவி வழங்கிட ஆணையிட்டுள்ளார்.**

* * *

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9